மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.

**පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, උතුරු පළාත.**

**PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, NORTHERN PROVINCE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No | NP/07/MSO/SUPRA/INT/MERIT | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2022.08.16 |

**திறமை அடிப்படையில் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2019(2020)**

2021.04.16 ஆம் திகதியில் எம்மால் விண்ணப்பம் கோரப்பட்டு 2021.11.28 ஆம் திகதியில் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மேற்படி பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைவாக இலங்கை பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்திற்கு திறமை அடிப்படையில் பதவியுயர்வு வழங்குவது தொடர்பாக அடிப்படைத் தகைமைகளை பரிசீலனை செய்வதற்காகவும், சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றிற்கான புள்ளிகளை வழங்குவது தொடர்பாகவும் இந்நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 2022.08.22, 2022.08.23, 2022.08.24 ஆகிய திகதிகளில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு குறித்த நேர்முகப் பரீட்சைக்கான தகவல்கள் அடங்கிய பெயர்ப்பட்டியல் கீழே வெளியிடப்பட்டுள்ளது.

02. குறித்த பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு ஏற்ப இல. 393/48, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு பரீட்சார்த்திகள் சமூகமளித்தல் வேண்டும்.

03. இந்நியமனமானது, எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் சேவை மூப்பு, அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்படும் புள்ளிகள் என்பவற்றின் மொத்த புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல.08/2021 இன் ஏற்பாடுகளுக்கமைய வெற்றிடத்திற்கு ஏற்ப வழங்கப்படும். அதற்கமைய, பரீட்சார்த்திகளின் பிரத்தியேக கோப்பு மற்றும் பிற முறைமை சார்ந்த ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றிற்கான புள்ளிகள் வழங்கப்படும்.

04. பரீட்சார்த்திகள் இந்நேர்முகத் தேர்விற்கு கீழ்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் I – III வரையான ஆவணங்களுக்கு மேலதிகமாக அவற்றின் நிழற்பிரதிகள் என்பவற்றுடன் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

I. பிறப்புச் சான்றிதழ்

II. தேசிய அடையாள அட்டை / பயணக் கடவுச்சீட்டு அல்லது வேறு ஏதேனும் செல்லுபடியாகும் அடையாள அட்டை

III. அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (பதவியுயர்வுக் கடிதங்கள், மேற்பார்வை பதவிகளுக்கான நியமிப்புக் கடிதங்கள் போன்ற ஆவணங்கள்)

IV. வரவு, வேலை, நடத்தை என்பன தொடர்பாக திணைக்களத் தலைவரால் வழங்கப்படும் சேவைச் சான்றிதழ்.

V. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இற்கான பதவியுயர்வுத் திகதி முதல் 2021.11.28 வரையான காலப்பகுதியில் எதுவித ஒழுக்காற்று தண்டனைகளும் வழங்கப்படவில்லை, ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருக்கவில்லை மற்றும் உடன் வரும் காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான ஏதுக்கள் எதுவுமில்லை என்பவற்றினை உறுதிப்படுத்தும் திணைக்களத் தலைவரின் கடிதம்.

VI. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இற்கான பதவியுயர்வுத் திகதி முதல் 2021.11.28 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட அரைச்சம்பள / சம்பளமற்ற விடுமுறை தொடர்பான விபரம்.

05. இந்நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கத்தவறும் பட்சத்தில் மேற்படி பதவியுயர்வு பெறும் தகுதியினை இழக்க நேரிடலாம். அத்துடன் இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதனால் மாத்திரம் இந்நியமனத்தினை பெற தகுதி பெற்றவராக கருதலாகாது. மேலும் இதற்குத் தோற்றுவதற்கெனச் செலவிடப்படும் பிரயாணப் படிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என்பதனையும் கவனத்தில்கொள்ளல் வேண்டும்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

***சி.திருவாகரன்,***
செயலாளர்.




Secretary : 021-221 9980 Office : 021-221 9981
Asst.Secretary : 021-205 4190 Exam Unit: 024- 221 9939
Ao : 021-221 9938 Fax No : 021-221 9940

இல. 393/48, கோயில் வீதி, யாழ்ப்பாண
අංකය 393/48, කෝවිල් පාර, යාපනය
No. 393/48, Temple Road, Jaffna

web : www.np.gov.lk
e-mail : admppscnp@gmail.com
exampscnp@gmail.com
finppscnp@gmail.com